அரசாங்கநிருவாகச் சுற்றறிக்கை இல: 163.

இணைந்த சேவைகள் பகுதி,
அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு 7.

1980 மார்ச் 26.

சகல அமைச்சுக்களினதும்,
செயலாளர்களுக்கும்.
திணைக்களத் தலைவர்களுக்கும்.

## தட்டெழுத்துத் தொகுதிகளைத் தாபித்தல்.

இவ்வமைச்சிலிருந்து விடுக்கப்பட்ட 1978.08.03 ஆந் திகதிய 1/53/அமைச்சு/நாஅவித/4 என்னும் இலக்க சுற்றறிக்கையைப் பார்க்க,

தட்டெழுத்தாளர் மத்திய தொகுதி யென்ற அடிப்படையில் சில திணைக்களங்களிற் தட்டெழுத்து வேலை ஒழுங்குபடுத்தப் படவில்லை. சில தட்டெழுத்தாளர்கள் கடும் வேலையிற் பணிக்கப்படுகின்றனர். சிலருக்குச் மிகவுஞ் சொற்ப வேலையே கொடுக்கப்பட்டுள்ளது. தட்டெழுத்தாளர்களின் சேவையை மையப்படுத்துவதன் மூலம் இந்நிலையை மாற்றுவதோடு மேலதிக நேர வேலையையும் குறைக்கலாம்.

அவ்வாறான தொகுதி ஒரு சிரேட்டதட்டெழுத்தாளரின் தலைமை வகிக்கப் படலாம். அவரின் நாளாந்த வேலை ஒதுக்கு தலைப் பதிதல் கட்டுப்பாட்டு நோக்கங்களுக்காக உதவியிருக்கும். தட்டெழுத்துத் தொகுதியின் தலைவர் கூட்டிணைப்புச் செய்து மற்றத் தட்டெழுத்தாளர்களுக்கு வழிகாட்டி, பொருட்களை உபயோகிப்பதிற் சிக்கனத்தையும், திட்டமிட்ட வேலையைச் சிறப்புறச் செய்வதையும் உறுதிப்படுத்தக் கூடியவராய் இருப்பார்.

ஒப்பம்: எஸ்.எம்.ஏ. ஜயசிங்க,
இணைந்த சேவைகள் பணிப்பாளர்.

ஒப்பம்: டி.பி.ஐ.எஸ். சிறிவர்தன,
செயலாளர்.
அரசாங்க நிருவாக அமைச்சு.